DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 102/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | ரஞ்சித்குமார் | Age | : | 26 |
| F/N | : | ராமசாமி | Occupation | : | கடல்தொழில் |
| Village | : | சேதுநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of July 2024.

**08.07.2024**

**(எதிரி ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் சேதுநகரில் குடியிருந்து கொண்டு கடல் தொழில் செய்து வருகிறேன். எதிரி விக்னேஷ்வரன் (எ) அன்டடேக்கர் என்பவரை தெரியும். நான் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **(புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 09.07.2022-ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் நானும், ஜெயகணேஷ் என்பவரும் வழுதூர் ரயில்வே கேட்டை கடந்து வடபுறம் வந்து இருசக்கர வாகனத்தை நிறுத்தி நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது எதிரி அங்கு வந்து ஜெயகணேஷ் என்பவரை பார்த்து நீ கஞ்சா சக்தி தம்பிதானடா இங்கே வந்து கஞ்சா விற்கிறியாடா என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி நீ கஞ்சா விற்க எங்களை போலீசார் சொல்வார்கள் என்று கூறினார் என்றால் சரியல்ல. அப்போது ஜெயகணேஷ் அவரை எதிர்த்து பேசினார் என்றால் சரியல்ல. அவர்களுக்குள் நடந்த வாக்குவாதத்தில் எதிரி கீழே கிடந்த பீர் பாட்டிலை எடுத்து ஜெயகணேசின் இடது நெற்றியில் அடித்து, இடது

கண்ணத்தில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இதை பார்த்த நானும், சண்முகம் என்பவரும் எதிரியை சத்தம்போட்டு விலக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. அப்போது எதிரி ஜெயகணேசை பார்த்து இனிமேல் இந்த ஏரியா பக்கம் வந்தால் குத்தி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றார் என்றால் சரியல்ல. பின்னர் ஜெயகணேசிற்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக அவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. அங்கு சிகிச்சையில் இருந்த போது கேணிக்கரை காவல்நிலைய போலீசார் வந்து ஜெயகணேசை விசாரிக்க அவரால் பேச முடியாததால் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாரணை – இல்லை**

(ஒப்பம்/–க. பிரபாகரன்)
நீதித்துறை நடுவர் எண்.2
இராமநாதபுரம்